சட்டம்

2012–2013

கொள்கை விளக்கக் குறிப்பு

மானியக் கோரிக்கை எண் 33

# சி.வி.சண்முகம்,

வணிக வரி, பதிவு, சட்டம், நீதிமன்றங்கள்
மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.

சட்டத் துறை

# கோரிக்கை எண் 33

# சட்டத் துறை

# 2012–2013 ஆம் ஆண்டுக்கான
# கொள்கை விளக்கக் குறிப்பு

# கோரிக்கை எண் 33

# சட்டத்துறை

## 2012–2013 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு


| வரிசை எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–9 |
| 2. | சட்டக் கல்வி | 9–14 |
| 3. | தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி | 14–16 |
| 4. | சான்றுறுதி அலுவலர்கள் | 16 |
| 5. | மாநில ஆட்சி மொழி(சட்டப்)பிரிவு | 16–18 |
| 6. | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் | 18–22 |
| 7. | 2012–2013ஆம் ஆண்டிற்கான பகுதி–II (புதிய) திட்டப் பணிகளுக்கான விவரப் பட்டியல் | 23–24 |

## 2012–2013 ஆம் ஆண்டிற்கான

## கொள்கை விளக்கக் குறிப்பு

## கோரிக்கை எண் 33

### 1.முன்னுரை.

“குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்’’.

“புறத்திலுள்ள பகைவர்களிடமிருந்து குடிமக்களைப் பாதுகாத்து உள் நாட்டில் அவர்தம் நலன்களைக் கவனித்துக் காக்க வேண்டிய ஓர் அரசன், சட்டத்திற்கெதிராகக் குற்றம் செய்கிறவர்களிடம் கடுமையாக நடந்து கொள்வது அவனுக்குரிய தொழிலாகும்; அஃது அவனுக்குப் பழியன்று’’. – தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

நமது அரசமைப்பானது, அடிப்படையில் கூட்டாட்சி அமைப்புடையதாகவும் அரசமைப்பின் உயரிய நிலை, மைய மற்றும் மாநில அரசுகளிடையே அதிகாரப் பகிர்வு, சுதந்திரமாக இயங்கும் நீதித்துறை போன்ற ஒப்பற்ற பண்பு நலன்களைக் கொண்டதாகவும் சிறந்து விளங்குகிறது.

நமது அரசமைப்பில் சமநலச் சமுதாயம் எனும் அம்சமானது அதன் முகப்புரையிலேயே முழுவதுமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், அனைத்து குடிமக்களுக்கும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதியை உறுதி செய்வதற்கான மக்களின் எதிர்பார்ப்பினை வெளிக்கொணர்கிறது.

அரசமைப்பின் வரம்புகளுக்கு உட்பட்டு மாநிலத்தின் நலனுக்காக, சட்டமியற்றுவதற்கு மாநில அரசிற்கு அதிகாரம் உள்ளது.

சமுதாயத்தின் ஆற்றலானது, சட்டம் எனும் அடிப்படையின் மீது அமைந்துள்ளது. சட்டம் என்பது சமுதாயத்துடன் நெருக்கமான தொடர்பில் இருந்து வருவதால், அது அசையாமல் இயக்கமின்றி இருக்க முடியாது. மாறிவரும் சமூகக் கோட்பாடுகளுக்கும் மதிப்பீடுகளுக்கும் இணங்கிய வகையில் சட்டமும் மாற வேண்டும். மரத்தைக் காக்கும் மரப்பட்டையானது வளர்ந்து, மேலும் வளர்கின்ற மரத்தின் பகுதிகளின் மீதும் படர்ந்து விரிவடையவில்லையெனில், ஒன்று அந்த மரத்தின் உயிர்ப்பை அது இழக்கச்செய்யும் அல்லது

அதுவே உயிருள்ள மரமாக இருக்கும் எனில் அந்தப் பட்டையை உதிரச் செய்துவிட்டு புதியதொரு உயிரோட்டமுள்ள மரப்பட்டையை தனக்கென வளர்த்துக்கொள்ளும். அதுபோலவே சட்டமானது மாறிவரும் சமுதாய தேவைகளுக்கு ஏற்றாற்போல் இல்லாவிடில் அது சமுதாயத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையிடுவதோடு அதன் வளர்ச்சியையும் பாதிக்கும் அல்லது சமுதாயமானது போதுமான அளவு சக்தி வாய்ந்ததாக இருக்குமெனில் அது அதன் வளர்ச்சிப்பாதையைத் தடுத்துக் கொண்டிருக்கும் சட்டத்தைத் தூக்கியெறிந்து விடும். எனவே, சட்டமானது வேகமாக மாறிவரும் சமுதாயத்திற்கு ஏற்பத் தன்னை மாற்றியமைத்துக்கொண்டு தொடர்ந்து முன்னேறுதல்

வேண்டுமேயன்றி பின் தங்கிவிடக் கூடாது. சமூக மற்றும் பொருளாதாரச் சமத்துவத்திற்கு நீதி, நேர்மை, சகோதர உணர்வு என்பவை முப்பெரும் தொகுதிகளாகத் திகழும் நிலையில், சட்டமானது நீதி, நேர்மை, நல்மனச்சான்று ஆகிய கொள்கைகளின் வெளிப்பாடாகத் திகழ்கிறது. சமுதாயத்தின் நேர்மையான நல்லதொரு ஆட்சிக்கு, சமூகக்கோட்பாடுகளையும் அதன் மதிப்பீடுகளையும் பிரதிபலிக்கும் வகையிலான சட்டங்களும், அவ்வாறு இயற்றப்பட்ட சட்டங்களுக்குச் சரியான பொருள் விளக்கம் அளித்து அவற்றை நிறைவேற்றும் வகையில் நீதி வழங்கும் முறையும் தேவையாகிறது.

சீரிய சமுதாயத்தை உருவாக்குதல் சட்டத்தின் முதன்மைப் பணியாகும். மேலும் சமுதாயக் கட்டமைப்பு சமுதாய நல்வாழ்வு என்ற களத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக சட்டம் கருதப்படுகிறது. சட்டங்கள் நீதிமன்றங்கள் மூலம் பொருள் விளக்கம் கொள்ளப்பட்டு, அரசு துறைகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

இந்த அரசின் சட்டத்துறையானது, சமுதாய நலனிற்கான அரசின் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காக மேற்சொன்ன கொள்கைகளை கவனத்திற்கொண்டு பல்வேறு சட்டங்களை இயற்றுகிறது.

அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக சட்டங்கள் தேவைப்படும்போது, சட்டத்துறை,

தொடர்புடைய துறையுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கைகளுக்கு சட்டவடிவமளித்து சட்ட முன் வடிவுகளை உருவாக்குகிறது.

சட்டப் பேரவை, சட்ட மசோதாவை நிறைவேற்றிய பின்னர், ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று அது சட்டமாகும் வரையில் சட்டத்துறையின் பணி தொடர்கிறது. சட்டப் பேரவை ஒத்திவைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும் அரசமைப்பின் 213–ஆவது உறுப்பின்படி அவசரச்சட்டம் வாயிலாக சட்டங்களை அவசரத் தேவைக்கேற்ப உருவாக்குகிறது. சட்டத்துறையின் பணி அவசரச் சட்டத்திற்கான முன்வரைவுகளை அதன் நோக்கத்திற்கேற்ப தயாரித்து அதை பிரகடனப்படுத்தும் வரையில் தொடர்கிறது.

மேலும் சட்டத்துறையின் முக்கிய பணியானது சட்டமன்றப் பேரவை செயலகம் உட்பட, தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் சட்டப் பிரச்சனை தொடர்பாக ஆலோசனை வழங்குவதாகும்.

இவை தவிர சட்டத்துறை சட்ட விதிகள், அறிவிக்கைகள், ஆணைகள் மற்றும் மாநில அரசு ஆவணங்கள் ஆகியவற்றையும் அவற்றின் சட்ட வகைமுறைகள் தொடர்பாகவும் கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது.

மாநில அரசால் தொடரப்படுகின்ற அல்லது மாநில அரசின் மீது தொடரப்படுகின்ற அனைத்து வழக்குகளிலும், உறுதிமொழி ஆவணங்களும், எதிர் உறுதி மொழி ஆவணங்களும், அவற்றிற்கான

மறுமொழிகளும் சட்டத்துறையால் கூர்ந்தாய்வு செய்யப்படுகின்றன.

மேலும், பின்வருவன தொடர்பான நிர்வாகப் பணிகளையும் சட்டத்துறை செய்து வருகிறது:–

1. சட்டக்கல்வி
2. தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி
3. சான்றுறுதி அலுவலர்கள்
4. மாநில ஆட்சி மொழி (சட்டப்)பிரிவு
5. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம்.

## 2. சட்டக் கல்வி

சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன், சட்டக் கல்வித் துறையானது தமிழ்நாட்டில் 1953ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இத்துறை தோற்றுவிக்கப்பட்ட பிறகு, தமிழ்நாட்டில் சட்டக்

கல்வியின் தரம் அனைத்து வகைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளதோடு, மேன்மேலும் முன்னேற்றமடைய இத்துறை தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி 1891ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி 1974ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1979–80 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், கோயமுத்தூரில் ஒன்றுமாக இரு அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. 1996–97ஆம் கல்வியாண்டில் திருநெல்வேலியில் ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தால் செங்கல்பட்டில் நடத்தப்பட்டு வந்த சட்டக் கல்லூரியை, அரசு சட்டக்

கல்லூரியாக அறிவித்து அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. **2008–2009**ஆம் ஆண்டு முதல் வேலூரில் ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. தற்போது தமிழ்நாட்டில் ஏழு அரசு சட்டக் கல்லூரிகள் செயற்பட்டு வருகின்றன.

அரசு சட்டக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவர்களின் இடங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

| வ.எண் | சட்டக் கல்லூரின் பெயர் | மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **1.** | டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி,சென்னை–**104.** (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 2288 |

| | | |
|---|---|---|
| 2. | அரசு சட்டக் கல்லூரி, மதுரை (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1428 |
| 3. | அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி. (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1430 |
| 4. | அரசு சட்டக் கல்லூரி, கோயமுத்தூர். (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1430 |
| 5. | அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி. (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1430 |
| 6. | அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு. (இளநிலை சட்டப் படிப்பு மட்டும்) | 1040 |
| 7. | அரசு சட்டக் கல்லூரி, வேலூர் இளநிலை சட்டப்படிப்பு – மூன்றாண்டு சட்டப் படிப்பு மட்டும். | 240 |

வேலூர் அரசு சட்டக் கல்லூரியைத் தவிர, இதர அரசு சட்டக் கல்லூரிகள் அனைத்தும் சொந்தக் கட்டிடங்களில் செயற்பட்டு வருகின்றன. சென்னை, மதுரை, கோயமுத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயற்பட்டு வரும் அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் தனித்தனியாக விடுதி வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரியில் மாணவியருக்கு மட்டும் விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரியில் பயிலுகின்ற மாணவர்களுக்கான விடுதிக் கட்டிடம் கட்டிட அபிஷேகபுரம் கிராமத்தில் நிலம் ஒதுக்கீடு செய்து அரசால் ஆணை

பிறப்பிக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியில் பயிலுகின்ற மாணவியர்களுக்கான விடுதிக் கட்டிடம் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

மாணவர்கள் சட்டத்தைத் தமிழில் பயிலுவதற்கேதுவாக, தமிழில் சட்டப் புத்தகங்களை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பாடத் திட்டத்திலுள்ள அனைத்து சட்டப் பாடங்களுக்கும் தமிழில் புத்தகங்கள் எழுதி முடிக்கப்பட்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தால் தமிழில் புத்தகங்கள் வெளியிடப்பட்டு வருகிறது.

<u>3. தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி</u>

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டத்தில் அமைந்துள்ள நாவலூர் குட்டப்பட்டு என்ற இடத்தில்

தேசிய அளவிலான மிகச் சிறந்த சட்டக் கல்வி வழங்கும் பொருட்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி நிறுவுவதற்காக 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 9/2012) இயற்றப்பட்டது. தேசிய சட்டப் பள்ளியினை நிறுவிட வேண்டி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான 25 ஏக்கர் நிலத்தை ஒதுக்கவும் இவ்வரசு முடிவு செய்தது.

தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளியின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள ரூ.100.00 கோடி மதிப்பீடு செய்யப்பட்டு முதல் கட்டமாக ரூ.75.00 கோடி ஒதுக்கீடு செய்து அரசாணை (நிலை) எண் 215, சட்டம், நாள் 02.04.2012 வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளியினை அடுத்த கல்வி ஆண்டிலேயே

தொடங்க ஏதுவாக அதற்கான பணிகளை விரைந்து ஒருங்கிணைத்து செய்யும் பொருட்டு தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

<u>4. சான்றுறுதி அலுவலர்கள்</u>.—

1952—ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி (மையசட்டம் 53/1952) முறையாவணங்களைச் சான்றொப்பமிடும் நோக்கத்திற்காகவும் மற்றும் சான்றுறுதி அலுவலரின் ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும் சான்றுறுதி அலுவலர் அமர்த்தப்படுவர்.

<u>5. மாநில ஆட்சிமொழி (சட்டப்) பிரிவு</u>

1965—ஆம் ஆண்டு முதன்முதலாக மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையம், சட்டச் சொற்களை உருவாக்கி

சட்டச் சொல் அகராதி வெளியிடுவதற்காகவும் மையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் அவற்றின்படி செய்யப்படும் விதிகள் மற்றும் அறிவிக்கைகள் ஆகிய அனைத்தையும் தமிழில் மொழி பெயர்ப்பதற்காகவும், அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படலாகும் பிற பணி எதனையும் மேற்கொள்வதற்காகவும் அமைக்கப்பட்டது.

மாநிலச் சட்ட ஆட்சி மொழி ஆணையம், சட்டத்துறைச் செயலாளரின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின் கீழும், சட்டத்துறை கூடுதல் செயலாளரின் தலைமையிலும், சட்டத்துறையின் ஒரு பிரிவாக 1992ஆம் ஆண்டு சட்டத்துறையுடன் சேர்க்கப்பட்டது. இது மையச் சட்டங்களையும், மாநிலச்

சட்டங்களையும் தமிழில் மொழி பெயர்த்து வருகிறது. மையச் சட்டங்களை மொழி பெயர்த்து புத்தகவடிவில் அச்சிடுவதற்கான செலவினை, மைய அரசு ஏற்று வந்தது. தற்போது மேற்கண்ட செலவினை, இனி மாநில அரசே ஏற்க வேண்டும் என **25.10.2011** நாளிட்ட மைய அரசின் கடித எண் 9(1)(iii)AT/88/Leg-II/178-ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாநிலச் சட்டங்களை மொழிபெயர்த்து அச்சிடும் செலவினை மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது.

6. **<u>தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்</u>**

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டில் சட்டக் கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திடவும், சிறந்த சட்ட

வல்லுநர்களை உருவாக்கும் நோக்கத்துடனும் தெற்காசிய நாடுகளில் சட்டக் கல்விக்கென தோற்றுவிக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமாக இது திகழ்கின்றது.

மேதகு தமிழக ஆளுநர் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் வேந்தர் அவர்களால் கடந்த 09–03–2012 அன்று இப்பல்கலைக்கழகத்தில் நுகர்வோர் சட்டம் மற்றும் சட்டவியல் என்ற மேதகு இருக்கை ஒன்று துவக்கி வைக்கப்பட்டது. இந்திய அரசின் நுகர்வோர் சார் அமைச்சகத்துறையின் ரூ.85,01,000/– நிதியுதவியுடன் மறைந்த திரு ஏ.கே.வெங்கடசுப்ரமணியன், ஐ.ஏ.எஸ். அவர்கள் பெயரில் இந்த இருக்கை துவக்கப்பட்டுள்ளது.

சீர்மிகு சட்டப்பள்ளியைச் சேர்ந்த ஐந்து மாணவர்கள், 2012 மார்ச் மாதம் அமெரிக்காவில்

நடைபெறவுள்ள மிகச் சீரிய மாதிரி நீதிமன்றப் போட்டியான பிலிப் சி ஜெசப் பன்னாட்டு நீதிமன்றப் போட்டியில் பங்கு பெற தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த 1994 முதல் இதுவரையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சட்டக் கல்லூரியிலிருந்து 130 குழுமங்களோடு மாணவர்கள் போட்டியிட இருப்பது இதுவே முதன்முறையாகும். தமிழக அரசானது மேற்படி மாணவர்கள் மேற்படி நீதிமன்றப் போட்டியில் பங்கேற்பதற்கென ரூ.5.00 இலட்சத்தினை சிறப்பு நேர்வாக கருதி வழங்கியுள்ளது.

தமிழக அரசானது கடந்த ஏப்ரல் 2012–ல் சீர்மிகு சட்டப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் ஆஸ்திரியாவிலுள்ள வியன்னாவில் நடைபெறவுள்ள

19–வது வருடாந்திர வில்லியம் – பன்னாட்டு வணிகசார் நடுவர்தீர்ப்பு என்ற தலைப்பில் நடைபெற்ற மாதிரி நீதிமன்றப் போட்டி மற்றும் 9–வது வருடாந்திர வில்லியம் – கிழக்கு பன்னாட்டு வணிகசார் நடுவர்தீர்ப்பு என்ற தலைப்பில் நடைபெறவுள்ள மாதிரி நீதிமன்றப் போட்டியில் பங்கேற்பதற்கென ரூ.3.75 லட்சத்தினை வழங்கியுள்ளது.

தமிழக அரசானது 2011–2012–ம் ஆண்டிற்கான பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் இப்பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் உணவு விடுதியின் மீது விருந்தினர் அறைகள் கட்டுவதற்காக ரூ.13,40,000/– நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

பல்கலைக்கழக மானியக் குழு,–

(அ) ரூ.50 லட்சம் மற்றும் ரூ.1,81,05,000/–க்கான நிதியினை பொது வளர்ச்சி நிதி மற்றும் அதன் தொடர்புடைய திட்டங்களுக்காக பதினோராவது திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளது.

(ஆ) ரூ.1,80,00,000/–தினை இப் பல்கலைக்–கழகத்திற்கு கூடுதல் உதவித் தொகையாக பிரிவு 12(பி)–ன் கீழ் ஒதுக்கீடு செய்துள்ளது.

(இ) ரூ.4,13,870–தினை இப்பல்கலைக்கழகத்திற்கு கடந்த 2010–2011–ம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுத் தொகையாக பதினோராவது திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்துள்ளது.

7. 2012-2013 **ஆம் ஆண்டுகளுக்கான பகுதி** II புதிய **திட்டப் பணிகளுக்கான விவரப் பட்டியல்**

**(ரூபாய் இலட்சத்தில்)**

| வ.எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | | | 2012–2013–இல் செலவு | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொடர் செலவு | தொடராச் செலவு | மொத்தம் | வருவாய் கணக்கில் செலவு | மூலதன கணக்கில் செலவு | கடன் கணக்கில் செலவு | மொத்தம் | குறிப்பு |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1 | தலைமைச் செயலகம்<br>அலுவலர்கள் மற்றும் பிரிவுகளுக்கு 25 கணினிகள் மற்றும் உதிரி பாகங்கள் வழங்குதல் | - | 10.00 | 10.00 | 10.00 | - | - | 10.00 | மாநில திட்டக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது |
| 2 | ஆறு பிரிவுகளுக்கு சிற்றறைகள் அமைப்பது | _ | 9.00 | 9.00 | 9.00 | - | - | 9.00 | மாநில திட்டக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது |
| 3 | சட்டக் கல்வி<br>திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரி மாணவியர் விடுதிக்கு இரண்டாவது தளம், மாதிரி நீதிமன்றம் மற்றும் கூடுதல் மிதி வண்டி நிலையம் கட்டுதல். | - | 92.57 | 92.57 | - | 56.20 | - | 56.20 | மாநில திட்டக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது |
| 4 | அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளுக்கு புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் வாங்குதல். | - | 14.00 | 14.00 | 14.00 | - | - | 14.00 | மாநில திட்டக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | சட்டக் கல்வி இயக்ககம் மற்றும் சட்டக்கல்லூரிகளுக்கு கணினிகள் மற்றும் துணை பாகங்கள், மென்பொருட்கள் வாங்குதல். | - | 9.50 | 9.50 | 9.50 | - | - | 9.50 | மாநில திட்டக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது |
| 6 | செங்கல்பட்டு மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிகளுக்கு குடிநீர் குளிரூட்டும் சாதனம் வாங்குதல். | - | 1.30 | 1.30 | 1.30 | - | - | 1.30 | மாநில திட்டக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது |
| 7 | <u>டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம்</u><br>சட்டப் பல்கலைக்கழகம் மற்றும் அதனால் அங்கீகரிக்கப்பட்ட அரசு சட்டக் கல்லூரிகளுக்கு கணினி மற்றும் உதிரி பாகங்கள், மடி கணினி, அச்சு இயந்திரம், நகல் இயந்திரம் வாங்குதல். | - | 20.00 | 20.00 | 20.00 | - | - | 20.00 | மாநில திட்டக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது |
| | **மொத்தம்** | - | 156.37 | 156.37 | 63.80 | 56.20 | - | 120.00 | |

சி.வி.சண்முகம்,

வணிக வரி, பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.